<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:- திருமதி. வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
(கூடுதல் பொறுப்பு)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 08-ம் நாள் செவ்வாய்கிழமை

*<u>இ.ம.எண். 162/2021 In அசல் வழக்கு எண்: 196/2016</u>*

செந்தில்குமார்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர், கடலூர்.
2. தாசில்தார், புவனகிரி ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. ஜம்புலிங்கம்
4. மங்கையர்கரசி ..... எதிர்மனுதாரர்கள்/ 3,4 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டியவர்கள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 2.3.2022-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகி பின்னர் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>உத்தரவு</u>

மனுவில் கண்ட 3, 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்கக் கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10ன் கீழ் தாக்கல் செய்த மனு.

<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், சேத்தியாதோப்பு கிராமத்தில் R.S. No. 212/1C என்ற வழக்கு சொத்து தனக்கு பாத்தியமானது என்றும், தான் வழக்கு சொத்தின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் 25 ஆண்டுகளுக்கும்

மேலாக இருப்பதாகவும், பட்டா மனுதாரர் பெயரில் இருப்பதாகவும், ஜம்புலிங்கம் என்பவர் தனது உறவினர் என்றும், வழக்கு சொத்தை பொறுத்து தான் ஜம்புலிங்த்திற்கு அதிகார முகவர் உரிமை கொடுத்திருப்பதாகவும், தான் 1962 சதுர மீட்டருக்கு மட்டுமே பவர் கொடுத்திருப்பதாகவும், மீதமுள்ள 48 ச.மீ தன்னிடம் இருப்பதாகவும், தான் அதிகாரம் கொடுத்திருப்பதை ரத்து செய்து அதை அவரிடம் தெரிவித்ததாகவும், 29.7.2013 அன்று ஜம்புலிங்கத்தின் மனைவி மங்கையர்கரசி தனது கடையின் முன்னால் வேலி வைக்க முயன்றதாகவும், ஜம்புலிங்கமும் மங்கையர்கரசியும் பட்டாவை அவருடைய பெயருக்கு மாற்றம் செய்ய கோரி 2ம் பிரதிவாதியிடம் வலியுறுத்தியதாகவும், பட்டாவை அவர் பெயருக்கு மாற்றம் செய்யக் கூடாது என தான் பிரதிவாதிகளிடம் மனு கொடுத்ததாகவும், தான் ஆட்சேபனை செய்தும் பட்டா அவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றும், எனவே தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்ததாகவும், 2ம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் ஜம்புலிங்கம் மற்றும் மங்கையர்கரசி அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினர் என ஆட்சேபனை செய்துள்ளதாகவும், இந்த வழக்கு தீர்வு காணப்பட அவர்களும் அவசியம் என்றும், எனவே மேற்படியாளர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டியது அவசியம் என்றும், மனுவில் கண்ட 3, 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 3,4 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்கக் கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 3,4 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், தாங்கள் அதை மறுப்பதாகவும், சேத்தியாதோப்பு சார்பதிவாளர் அலுவலக 19.1.2009 தேதியிட்ட ஆவண எண். 2/2009 BKA ஆவணத்தின்படி 1962 சதுர மீட்டருக்கு மட்டுமே பவர் கொடுத்திருப்பதாகவும், அதிகார முகவர் ஆவணத்தில் வழக்கு சொத்தானது "சிதம்பரம் ரி.டி. சேத்தியாதோப்பு சப்.டி. சேத்தியாதோப்பு கிராமத்தில் அ-பு.ரி.ச. எண். 212/1.0.54ல் தென்புரம் 0.22ல் தெற்கு வடக்கு ஜாதியடி 16 கிழக்கு மேற்கு ஜாதியடி 122 அளவுடைய 1952 சதுர அடி காலி மனை இந்த பொது அதிகார ஆவணத்திற்குட்பட்டது. இம்மனை நத்தம் நிலவரி திட்டப்படி 212/1சி 0.0900 சதுர மீட்டரில் கட்டுப்பட்டது. இது செந்தில்குமார் மனைக்கும் (வ) (தெ) சுந்தரராஜ் மனைக்கும்(மே) மெயின்ரோட்டுக்கும்(கி) என்ற நான்கெல்லைக்குட்டபட்டது" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதிகார முகவர் ஆவணத்தின்படி 3ம் பிரதிவாதி அவரது மனைவியான 4ம் பிரதிவாதிக்கு சேத்தியாதோப்பு சார்பதிவாளர் அலுவலக 13.10.2020 தேதியிட்ட ஆவண எண்.2022/2010 ஆவணத்தின்படி "சிதம்பரம் ரி.டி. சேத்தியாதோப்பு சப்.டி. சேத்தியாதோப்பு கிராமத்தில் அ-பு.ரி.ச. எண். 212/1.0.54ல் தென்புரம் 0.22ல் தெற்கு வடக்கு ஜாதியடி 16 கிழக்கு மேற்கு ஜாதியடி 122 அளவுடைய 1952 சதுரஅடி காலிமனை இந்த

பொது அதிகார ஆவணத்திற்குட்பட்டது. இம்மனை நத்தம் நிலவரி திட்டப்படி 212/1சி 0.0900 சதுர மீட்டரில் கட்டுப்பட்டது. இது செந்தில்குமார் மனைக்கும் (வ) (தெ) சுந்தரராஜ் மனைக்கும்(மே) மெயின்ரோட்டுக்கும்(கி) என்ற நான்கெல்லைக்குட்டபட்டது" என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், 4ம் பரதிவாதிக்கு பதிவு செய்த பின்னர் கணக்கு வழக்குகளுடன் வழக்கு சொத்தை மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், வழக்கு சொத்து சம்மந்தப்பட்டவைகளை பெற்று கொண்ட பின்னர் அதிகாரமானது செல்லாது என்றும், சரியான பிரதிபிரயோஜனத்திற்கு 4ம் பிரதிவாதி கிரயம் பெற்ற பின்னர் 4ம் பிரதிவாதி வழக்கு சொத்திற்கான பட்டாவை தன் பெயருக்கு மாற்றம் செய்து கொண்டதாகவும், மீதமுள்ள 48 ச.மீ மனுதாரரிடமே இருப்பதாகவும், 16 X 122 ற்கு மட்டுமெ பவர் கொடுக்கப்பட்டதாகவும், 4ம் பிரதிவாதி தான் கிரயம் பெற்ற சொத்திற்கு மட்டுமெ பட்டா பெற்றிருப்பதாகவும்,1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துகட்டளை கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றும், நீதிமன்ற நேரத்தை வீணடிக்கவே மனுதாரர் இந்த 3, 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் சேர்ப்பதாகவும், வழக்கு சொத்தானது 4ம் எதிர்மனுதாரர் பெயருக்கு பதிவு செய்தது தெரிந்திருந்தும் இந்த 4ம் எதிர்மனுதாரரை அலைகழிக்க செய்கிறாா் என்றும். எனவே மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளார்.

5. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போதும் வழக்கு சொத்தை பொறுத்து மனுதாரர் ஜம்புலிங்கம் என்பவருக்கு அதிகார முகவர் உரிமை கொடுத்திருந்ததாகவும், மனுதாரர் அதிகாரம் கொடுத்ததை ரத்து செய்துவிட்டு அதை அவரிடம் தெரிவித்திருந்ததாகவும், 29.7.2013 அன்று ஜம்புலிங்கத்தின் மனைவி மங்கையர்கரசி மனுதாரர் கடையின் முன்னால் வேலி வைக்க முயன்றதாகவும், ஜம்புலிங்கமும் மங்கையர்கரசியும் வழக்கு சொத்திற்கான பட்டாவை மங்கையர்கரசி பெயருக்கு மாற்றம் செய்ததால் மனுதாரர் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக செலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்ததாகவும், 2ம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் ஜம்புலிங்கம் மற்றும் மங்கையர்கரசி அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினர் என குறிப்பிட்டதன் அடிப்படையில் மேற்படியாளர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க இம்மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் இம்மனுவிற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தாலும் வழக்கு சொத்தை கிரயம் பெற்றதாக சொல்லப்படும் நபர்களையும் அசல் வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்பது அவசியமான ஒன்றாகும். தாவா சொத்தில் சம்மந்தப்பட்ட நபர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்கை மேல் நடத்தினால் பல்வேறு வழக்குகள் எழுவதை தடுக்க முடியும்.

முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 8.3.2022ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-V.Geetha)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC)